பிரசார் பாரதி

அகில இந்தய வானொலி, சென்னை-4

21 08 2026 12 40

வெள்ளிக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா தலைமையேற்று நடத்தவுள்ள பிரிக்ஸ் உச்சி மாநாட்டையொட்டி தொலைத்தொடர்பு அமைச்சர்கள் கூட்டம் மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தலைமையில் புனேயில் தொடங்கியது.

2. மேற்குவங்க மாநிலம் சென்றுள்ள உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று சிலிகுரியில் வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

3. ஜம்மு-ஸ்ரீநகர் இடையே உதம்பூர் வழியாக வந்தே பாரத் ரயில் இயக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

4. ஈரான் நாட்டை இணைக்கும் அனைத்து நீர்வழித் தடங்களையும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டியது அவசியம் என்று அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

5. ஜெர்மனி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sahaja Yamalapalli காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா தலைமையேற்று நடத்தவுள்ள பிரிக்ஸ் உச்சிமாநாட்டையொட்டி தொலைத்தொடர்புத்துறை அமைச்சர்களின் 12வது கூட்டம் மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தலைமையில் புனேயில் இன்று தொடங்கியது.

உறுப்பு நாடுகளின் தொலைதொடர்பு அமைச்சர்கள், முக்கிய பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

தகவல் தொடர்பு, தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல், மின்னணு கட்டமைப்புகள் உள்ளிட்டவை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

எழுச்சி மிக்க எதிர்காலத்தை உருவாக்குவதற்கான புதிய கண்டுபிடிப்புகள், ஒத்துழைப்பு மற்றும் மாற்றம் என்பது இக்கூட்டத்தின் கருப்பொருளாகும்.

<<<<>>>>

இந்தியா தலைமையேற்று நடத்தவுள்ள பிரிக்ஸ் உச்சி மாநாட்டையொட்டி, சுற்றுலாத்துறை அமைச்சர்களின் கூட்டம் ஜெய்ப்பூரில் சற்றுமுன் தொடங்கியது.

இரண்டு நாள் நடைபெறும் இக்கூட்டத்தில் பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் சுற்றுலாத்துறை அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொண்டுள்ளனர்.

நீடித்த மற்றும் நம்பிக்கை மிக்க சுற்றுலாக் கட்டமைப்பை ஏற்படுத்துவது, திறன் மேம்பாடு, தடையற்ற போக்குவரத்து வசதி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்பங்களை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு முக்கிய விஷயங்கள் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளன.

பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே தொலைத்தொடர்புத் துறையில் ஒத்துழைப்பு வலுப்படுத்துவது குறித்தும், வளர்ந்து வரும் நாடுகளின் தொலைத்தொடர்பு கட்டமைப்பை மேம்படுத்துவது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

<<<<>>>>

பிரதமரின் ஆஷா திட்டத்தின்கீழ் விவசாயிகள் பயன்பெறுவதற்கான நிதி ஒதுக்கீடு ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

விவசாய விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கான இத்திட்டத்திற்கு கடந்த 2024-25ஆம் ஆண்டு 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்ததாகவும், நடப்பு நிதியாண்டில் இது 7 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாய விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்து நிலையான வருவாய் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு செய்து வருவதாகவும் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மூன்று நாள் பயணமாக மேற்குவங்க மாநிலம் சென்றுள்ள உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று சிலிகுரியில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்த பின் இதர நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

இன்று பிற்பகல் Kawakhali மைதானத்தில் புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள் தொடர்பான கண்காட்சியை தொடங்கி வைக்கிறார்.

மேற்குவங் முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி மற்றும் மாநில அமைச்சர்கள் இதில் கலந்துகொள்கிறார்கள்.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வை அனைத்து தரப்பினரிடமும் கொண்டு செல்லும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி இம்மாதம் 26ஆம் தேதி வரை நடைபெறும்.

மேற்குவங்க மாநில பிஜேபி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களையும் திரு. அமித் ஷா இன்று மாலை சந்தித்துப் பேச உள்ளார்.

<<<<>>>>

ஜம்மு - ஸ்ரீநகர் இடையே உதம்பூர் வழியாக 3வது வந்தே பாரத் ரயிலை இயக்குவதற்கான நடவடிக்கைகளை ரயில்வே துறை மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்கிற்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், அவரது கோரிக்கையை ஏற்று 3வது வந்தே பாரத் ரயிலுக்கு ஒப்புதல் அளிக்கப்படுவதாக கூறியுள்ளார்.

வந்தே பாரத் ரயில் வசதி தங்களுக்கு கிடைத்துள்ளதற்கு உதம்பூர் மக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இந்த ரியல் சேவையின் மூலம் அப்பகுதியின் பொருளாதாரம், சுற்றுலா மேம்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

உதம்பூர் மக்களின் நீண்ட காலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ், திரு. ஜிதேந்திர சிங்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஜம்மு - ஸ்ரீநகர் இடையே உதம்பூர் வழியாக 3வது வந்தே பாரத் ரயிலை இயக்குவதற்கான நடவடிக்கைகளை ரயில்வே துறை மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்கிற்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், அவரது கோரிக்கையை ஏற்று 3வது வந்தே பாரத் ரயிலுக்கு ஒப்புதல் அளிக்கப்படுவதாக கூறியுள்ளார்.

வந்தே பாரத் ரயில் வசதி தங்களுக்கு கிடைத்துள்ளதற்கு உதம்பூர் மக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இந்த ரியல் சேவையின் மூலம் அப்பகுதியின் பொருளாதாரம், சுற்றுலா மேம்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

உதம்பூர் மக்களின் நீண்ட காலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ், திரு. ஜிதேந்திர சிங்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சிங்கப்பூர் உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

நான்காவது இந்தியா - சிங்கப்பூர் அமைச்சர்கள் நிலையிலான பொருளாதார மற்றும் வர்த்தக சந்திப்பு நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இந்தியாவின் வளர்ச்சி குறித்தும், விரைந்து வளர்ச்சி பெற்று வரும் பொருளாதாரமாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகள் அதிகளவில் உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு தொழில்கள் மற்றும் வர்த்தகத்தைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இக்கூட்டத்தையொட்டி திரு. பியூஷ் கோயல், Global Finance and Technology Network நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு. Sopnendu Mohanty-ஐ சந்தித்து முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்து விவாதித்தார்.

இந்தியா - சிங்கப்பூர் இடையிலான நிதிசார் ஒத்துழைப்பு, தொழில்நுட்ப பகிர்வு, மின்னணு பொருளாதாரம் உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்தும் விவாதித்தார்.

இந்தக் கூட்டத்தில் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா, சிங்கப்பூரின் வெளியுறவு மற்றும் வர்த்தகத் தொழில்துறை அமைச்சர் திரு. Gansiou மற்றும் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

<<<<>>>>

நாடு முழுவதும் மத்திய அரசின் முத்ரா வங்கிக் கடனுதவித் திட்டத்தின்கீழ் புதிய தொழில்முனைவோர் தொழில் தொடங்குவதற்கு கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

தென்காசி மாவட்டத்தில் மத்திய அரசின் கடனுதவி பெற்று தொழில் தொடங்கி பயன்பெற்று வருவதாக தொழில்முனைவர் திரு. தெரிவித்துள்ளார்.

(Voice Byte – 37 Sec)

<<<<>>>>

ஈரான் நாட்டை இணைக்கும் அனைத்து நீர்வழித் தடங்களையும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

தனியார் வானொலிக்கு அவர் அளித்த பேட்டியில், ஈரான் மேலும் அணு ஆயுதங்கள் வாங்குவதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்று தெரிவித்தார்.

ஈரான் மீதான ராணுவ நடவடிக்கை சரியானதே என்று தெரிவித்த திரு. ட்ரம்ப், இந்தப் போர்ச்சூழல் காரணமாக அமெரிக்க மக்கள் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வை சந்தித்து வருவதாக கூறினார்.

ஈரானில் அணு ஆயுத உற்பத்திக்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும், அந்நாட்டு ராணுவம் தனது வலிமையை முற்றிலும் இழந்துவிட்டதாகவும் அவர் கூறினார்.

ஏவுகணைகளையோ, ட்ரோன்களையோ உற்பத்தி செய்ய முடியாத நிலையில் ஈரான் உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஈரானிடம் அணு ஆயுதங்கள் கிடைத்துவிட்டால் இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் மீது அணு ஆயுத தாக்குதல் நடத்த அந்நாடு முற்படும் என்றும் திரு. ட்ரம்ப் கூறினார்.

சவுதி அரேபியா, கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், பஹ்ரைன் ஆகிய நாடுகள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்த ஈரான் திட்டமிட்டுள்ளதாகவும் அமெரிக்க அதிபர் திரு. திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

<<<<>>>>

சோமாலியாவில் Puntlane கடற்கரைப் பகுதியில் கேமரூன் நாட்டைச் சேர்ந்த சரக்குக் கப்பலை கடற்கொள்ளையர்கள் கடத்தியுள்ளனர்.

அதில் பயணம் செய்த 10 மாலுமிகளில் 6 பேர் இந்தியர்கள்.

Lupuf என்ற பெயரிலான இந்த கப்பல் கடத்தப்பட்ட பின், Nugaal பகுதிக்கு கொள்ளையர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தக் கப்பலில் துருக்கி நாட்டின் ராணுவப் பயிற்சிக்காக தளவாடங்கள் எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தொலைத்தொடர்புக் கருவிகள் மற்றும் செயற்கைக்கோளில் பயன்படுத்தும் கருவிகளும் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இதில் சென்ற மாலுமிகளில் 6 பேர் இந்தியர்கள். தலா ஒருவர் துருக்கி மற்றும் ஜார்ஜியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கேரள கடலோரப் பகுதிகளில் இன்று அலையின் சீற்றம் கடுமையாக இருக்கக் கூடும் என்று தேசிய கடல்சார் தகவல் சேவை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒன்று முதல் ஒன்றரை மீட்டர் உயரம் வரை அலைகள் எழக்கூடும் என்றும், திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழா, எர்ணாகுளம், மலப்புரம், கோழிக்கோடு, கண்ணூர் மற்றும் காசர்கோடு பகுதிகளில் இந்த அலையின் சீற்றம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஜெர்மனியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sahaja Yamalapalli காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் 7-6, 6-3 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் Caroline Raschdorf-ஐ வென்றார்.

--------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் திண்டுக்கல் - கோவை அணியையும், சேப்பாக் - திருச்சி அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>